### தேசிய தொழில்நுட்பக் கழகப் பணியாளர்களுக்கு

# இந்தி மொழித் தேர்வைக் கட்டாயமாக்குவதா?

## உடனே ரத்து செய்ய முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

சென்னை, ஆக.25-

தேசிய தொழில்நுட்பக் கழக பணியாளர்களுக்கான தேர்வில் இந்தி மொழியை கட்டாயமாக்குவதை ரத்து செய்ய வேண்டுமென வலியுறுத்திமுதல்வர்மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலை தளப் பதிவு வருமாறு: -

**தேசிய தொழில்நுட்பக் கழகங்கள் (NIT) மற்றும் ஒன்றியக் கல்வி அமைச்சகத்தின்கீழ் இயங்கும் பிற நிறுவனங்களில் உள்ள ஆசிரியரல்லாத பணியிடங்களுக்குத் தேசிய தேர்வு முகமை (NTA) இந்தி மொழித் தேர்வைக் கட்டாயமாக்கி இருப்பது மொழிச் சமத்துவத்தைக் குலைக்கும் செயலாகும். பன்முகத்தன்மையை அப்பட்டமாக அவமதிப்பதாகும். இவ்வாறு இந்தியைத் திணிப்பது தமிழ்நாடு உள்ளிட்ட பிற இந்தி பேசாத மாநில இளைஞர்களின் வாய்ப்புகளைப் பறிப்பதாக உள்ளது. நியாயமற்ற இந்தி மொழித் தேர்வை ரத்து செய்து, அனைவருக்குமான தேர்வாக இதனை மாற்றுக.**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

### சந்திரயான் 3 வெற்றிக்கு அமெரிக்க துணை அதிபர் கமலா ஹாரிஸ் வாழ்த்து!

*வாஷிங்டன், ஆக. 25 -*

*நிலவில் வெற்றிகரமாக தரையிறங்கியது விக்ரம் லேண்டர்.*

*நிலவின் தென் துருவப் பகுதியில் வரலாற்றுச் சிறப்புமிக்க சந்திரயான் 3 விண்கலம் தரையிறங்கியதற்கு அமெரிக்க துணை அதிபர் கமலா ஹாரிஸ் வாழ்த்து தெரிவித்துள்ளார்.*

*இது தொடர்பாக கமலா ஹாரிஸ், தனது சமூக வலை தள பதிவில், "சம்பந்தப்பட்ட அனைத்து விஞ்ஞானிகள் மற்றும் பொறியாளர்களுக்கு இது ஒரு நம்பமுடியாத சாதனையாகும். விண்வெளி ஆய்வில் உங்களுடன் பங்குதாரர்களாக இருப்பதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம்" என பதிவிட்டுள்ளார்.*

# பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** ஏண்ணே; பா.ஜ.க. ஆட்சி செய்யும் உத்தரப் பிரதேச மாநிலத்தில், பஞ்சாங்கத்தைக் கடைப்பிடிக்குமாறு காவல் துறையினருக்கு, டி.ஜி.பி. விஜயகுமார் சுற்றறிக்கை அனுப்பி இருக்கிறாராமே ?

**பட்டணம் : ஆமாம்; உ.பி. மாநில பா.ஜ.க. முதலமைச்சராக இருப்பவர் யோகி ஆதித்யநாத் சாமியார். அவர் பச்சைப் பழமைவாதி; மூட நம்பிக்கைகளின் மொத்த உருவம்.**

**அப்படிப்பட்ட முதலமைச்சரின் காவல் துறைத் தலைவராக இருக்கும் விஜயகுமார், பஞ்சாங்கத்தைப் பரப்பிடும் வகையில் சுற்றறிக்கை அனுப்பி இருப்பது, ஜாடிக்கேற்ற மூடி என்ற நிலைமைதான்.**

**டி.ஜி.பி. அனுப்பியுள்ள சுற்றறிக்கையில், "பொதுவாக குற்ற சம்பவங்கள் அமாவாசைக்கு ஒரு வாரம் முன்பும், அமாவாசைக்கு ஒரு சில நாள்களுக்குப் பின்பும்தான் அதிகமாக நிகழும். எனவே அதற்கேற்ப, மாதந்தோறும் அந்த நாட்களில் காவல் துறை கண்காணிப்பை அதிகரிக்குமாறு" கூறியிருக்கிறார்.**

**இந்திய அரசமைப்புச் சட்டத்தில், அடிப்படைக் கடமைகளுள் ஒன்றாக விஞ்ஞான மனப்பான்மை ( Scientific Temper ) வேண்டும் எனச் சொல்லப்பட்டிருக்கிறது.**

**அரசமைப்புச் சட்டம் என்பதை பா.ஜ.க.வினர் வெறும் ஏட்டுச் சுரைக்காயாகத்தான் எடுத்துக் கொள்கிறார்கள் போலும் !**

**அவர்கள் அப்படி என்றால், அதிகாரிகள் அவர்களை அப்படியே அங்குலம் பிசகாமல் பின்பற்றுவது, கடமையிலிருந்து பிறழ்ந்து நடப்பதற்குச் சமம் !**

### திருநெல்வேலி மாவட்டத்தில் சாலை விபத்தில் உயிரிழந்த

# தொலைக்காட்சி ஒளிப்பதிவாளர் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஆக. 25–

திருநெல்வேலி மாவட்டத்தில் சாலை விபத்தில் உயிரிழந்த தொலைக்காட்சி ஒளிப்பதிவாளர் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறியதோடு நிதியுதவியும் வழங்கப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு வருமாறு:–

நாங்குநேரி சுங்கச்சாவடி அருகே நேற்று முன்தினம் (23.8.2023) இரவு நடந்த சாலைவிபத்தில், திருநெல்வேலி மாவட்டம், ஆரைகுளம், முன்னீர்பள்ளத்தைச் சேர்ந்த தனியார் தொலைக்காட்சி ஒளிப்பதிவாளர் சங்கர் (வயது 33) என்பவர், சந்திரயான் விண்கலம் தொடர்பான செய்திக்காக திருவனந்தபுரம் சென்று திருநெல்வேலி திரும்பும் வழியில் உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

மேலும் இவ்விபத்தில் படுகாய மடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் மூன்று நபர்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்க அறிவுறுத்தியுள்ளேன்.

இளம் வயதில் உயிரிழந்த தொலைக்காட்சி ஒளிப்பதிவாளர் சங்கர் அவர்களது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு ஐந்து இலட்சம் ரூபாயும், படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் மூன்று நபர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.


### வணிகர்களின்

# கோரிக்கைகளை நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்கும்!

## வணிகர் சங்கப் பிரதிநிதிகள் கூட்டத்தில் அமைச்சர் பி.மூர்த்தி தகவல்!

*சென்னை, ஆக. 25 -*

*வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நேற்று முன்தினம் (23.8.2023) சென்னை கலைவாணர் அரங்கத்தில், வணிக வரித்துறை சார்பாக, தமிழ்நாடு அனைத்து வணிகர் சங்கப் பிரதிநிதிகளின் கருத்துக் கேட்பு கூட்டம் நடைபெற்றது.*



*கூட்டத்தில் தொடக்க உரை ஆற்றிய அரசு செயலாளர் வணிகவரித்துறை (ம) பதிவுத்துறை செயலர், பூவிலிருந்து தேனை பூவிற்கே தெரியாமல் எடுப்பது போல் வணிகர்களிடமிருந்து சிரமமில்லாமல் வரி வசூலிக்க வேண்டும் என கூறினார்.*

*இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு மாநில வணிகர் நல பேரமைப்பு தலைவர் விக்கிரமராஜா, சேம்பர் ஆஃப் காமர்ஸ் தலைவர், இரத்தின வேலு , தமிழ்நாடு மாநில வணிகர் நல வாரிய பேரவை தலைவர் வெள்ளையன் ஆகியோர் உள்ளிட்ட 262 வணிக சங்கங்களும், அதன் பிரதிநிதிகளாக 600க்கும் மேற்பட்டோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு தங்கள் நிறைகள், குறைகள் மற்றும் கோரிக்கைகளை அமைச்சரின் முன் வைத்தனர்.*

*சிறுவணிகர்கள் பாதிக்காவண்ணம் அபராதம் விதிக்க வேண்டும் எனவும், வணிகர்கள் சிரமத்திற்குள்ளாவதை தடுக்கும் வகையில் ஆய்வு மேற்கொள்ள வேண்டும் எனவும் கோரிக்கைக்கு வைத்தனர். வணிகவரித்துறையின் முதன்மைச் செயலர் (ம) வணிகவரி ஆணையர் தமது சிறப்புரையில், வணிகவரி செலுத்துவோரின் எண்ணிக்கையை மேம்படுத்த துறைசார் நடவடிக்கையாக ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகிறது.*

*வணிகர்கள் பொது மக்கள் செலுத்திய வரியினை முறையாக செலுத்துமாறும், துறை அலுவலர்கள் தவறு செய்யும் பட்சத்தில் உடனடியாக உரிய ஆதாரங்களுடன் கவனத்திற்கு கொண்டு வருமாறும் , மேலும், ஓர் வணிக நிறுவனத்தில் ஒரு குறிப்பிட்ட அரசு அலுவலர்களால் (மத்திய அரசு ) ஆய்வு மேற்க்கொள்ளப்பட்டிருப்பின் அப்பொருள் குறித்து மாநில அரசு அளவில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட மாட்டாது எனவும். வணிகர்களின் நலன் கருதியே தற்போத Call Centre ஏற்படுத்தப்பட்டு பயன்பாட்டிற்க்குக் கொண்டுவரப்பட்டுள்ளது எனவும் GST மத்திய மேல்முறையீடு தீர்ப்பாயம் சென்னை, மதுரை மற்றும் கோயமுத்தூர் ஆகிய மாவட்டங்களில் அமைக்க நடவடிக்கை மேற்க்கொள்ளப்படுகிறது தெரிவித்தார்.*

*இதில் அமைச்சர் பி. மூர்த்தி தலைமை வகித்துப் பேசியதாவது:-*

*கடந்த பிப்ரவரி திங்களில் சிறு தவறுகளுக்கு (பிழை திருத்தம்) ரூ.500/ மட்டும் அபராதமாக செலுத்தி சரக்குகளை கொண்டு செல்வதற்கு ஏதுவாக சுற்றறிக்கை வழங்கப்பட்டுள்ளது எனவும், மேற்கொள்ளதவறும்அதிகாரிகள் குறித்து உடனடியாக அரசு மற்றும் துறையின் கவனத்திற்கு கொண்டு வருமாறும் அதன் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்படும்.*

*மேலும், அத்தியாவசிய பொருட்கள் மற்றும் இதர இனங்களில் வரி குறைப்பு என்பது ஜி.எஸ்.டி. கவுன்சில் கூட்டத்தில் முடிவு செய்யப் படுவது என்பதால் வணிகர்களின் அனைத்து கோரிக்கைகளையும் நிதி அமைச்சர் அவர்களின் மூலம் ஒன்றிய அரசுக்கு மேலனுப்ப அரசு தரப்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

*மேலும் வணிகர்களின் நலன் கருதியே அரசு 'சமாதான திட்டத்தினை' ஆறு மாத காலத்திற்குள் நடைமுறைப்படுத்த உள்ளது. வணிகர்களின் குறைகளை அறிந்து, அதனை களைவதற்காகவும், வணிகர்களிடையே சுமுகமான உறவினை மேம்படுத்த இது போன்ற கூட்டங்கள் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மண்டலம் வாரியாக இணை ஆணையர் நிலையில் நடத்தப்படும்.*

*வணிகர்களின் குறைகள் கேட்டறிந்து ஒரு நண்பரை போல அரசு செயல்படும் எனவும் துறை அலுவலர்களால் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் , சிறு வணிகர்கள் மற்றும் எவரும் பாதிக்காத வகையில் மேற்கொள்ளப்படும்.*

*இவ்வாறு அமைச்சர் பி.மூர்த்தி தெரிவித்தார்.*

*கூட்டத்தில் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அரசு செயலாளர், திருமதி.பா. ஜோதி நிர்மலாசாமி முதன்மைச் செயலாளர் / வணிகவரி ஆணையர் தீரஜ் குமார் வணிகவரி கூடுதல் ஆணையர்கள் அ.பா. தேவேந்திர பூபதி, மு.பரமேஸ்வரன், திருமதி கு.லதா, ஜி.முகம்மது நௌபல், ஆர்.எல்.அருண் பிரசாத், வணிகவரித் துறை உயர் அலுவலர்கள், வணிகர் நல வாரிய உறுப்பினர்கள் மற்றும் பல்வேறு வணிகர் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.*

# தி.மு.க. தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள் கூட்டம்!

## தொழிலாளர் அணிச் செயலாளர் பி.டி.சி.ஜி.செல்வராஜ் அறிவிப்பு!

கழக தொழிலாளர் அணியின் மாநில நிர்வாகிகள் கூட்டம் வருகின்ற (5.9.2023 செவ்வாய்க்கிழமை) காலை 10 மணி அளவில், அண்ணா அறிவாலயத்தில், எனது தலைமையில் நடைபெற உள்ளதால் அனைத்து மாநில நிர்வாகிகளும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை கழகத் தலைவர் அவர்கள் 19.8.2023 அன்று அறிவித்த வழிகாட்டுதலின் படி செயல்படுத்துதல் தொடர்பாகவும்,

மாவட்டம் தோறும் தொழிலாளர் அணி சார்பாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை சிறப்பாக கொண்டாடுவது தொடர்பாகவும்.

**பி.டி.சி.ஜி.செல்வராஜ்**
செயலாளர்
தி.மு.க.தொழிலாளர் அணி

### ஒரு மாதமாகப் பெய்யும் கனமழை

# இமாச்சலத்தில் நிலச்சரிவு - சரிந்துவிழும் வீடுகள் !

## 300க்கும் மேற்பட்டோர் பலி!

*குல்லு, ஆக. 25-*

*இமாச்சல பிரதேசத்தில் நிலச்சரிவு காரணமாக ஏராளமான வீடுகள் சீட்டுக் கட்டு போல இடிந்து விழும் பரபரப்பு காட்சிகள் வெளியாகியுள்ளன.*



*இமாச்சல பிரதேசத்தில் கடந்த ஒரு மாதமாக பெய்யும் கனமழை காரணமாக வெள்ளப் பெருக்கும், தொடர் நிலச்சரிவுகளும் ஏற்பட்டுள்ளன. இந்த இயற்கை பாதிப்புக்கு இதுவரை 300க்கும் மேற்பட்டோர் பலியாகி விட்டனர். மேலும் பலரை காணவில்லை.*

*இந்நிலையில் குல்லு மாவட்டம் அன்னி நகரில் நிலச்சரிவு ஏற்பட்டது. இதனால் மலையோரத்தில் இருந்த ஏராளமான வீடுகள் இடிந்து சீட்டுக்கட்டு போல சரிந்தன.*

*நிலச்சரிவு நடைபெற்ற இடத்தில் மீட்பு பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. இடிந்து விழுந்த வீடுகளினால் உயிரிழப்பு எதுவும் ஏற்பட்டதா, யாரும் காயம் அடைந்தனரா என்பது குறித்து தகவல் இதுவரை வெளியாகவில்லை.*

**தேசிய பேரழிவாக அறிவிக்க காங்கிரஸ் கோரிக்கை!**

*இமாச்சல பிரதேச மாநிலத்தில் இடைவிடாமல் பெய்யும் கனமழையால், பல இடங்களில் வெள்ளப் பெருக்கும், நிலச்சரிவுகளும் ஏற்பட்டு உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன.*

*இந்நிலையில் செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் ராஜீவ் சுக்லா, 3 முறை இடை விடாமல் பெய்த கனமழையினால் இமாச்சல பிரதேசத்தில் பேரழிவு ஏற்பட்டிருப்பதாகவும், இதுவரை கனமழை, நிலச்சரிவுக்கு 330 பேர் உயிரிழந்து இருப்பதாகவும், 35 பேர் காணாமல் போயிருப்பதாகவும், 12 ஆயிரம் வீடுகள் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டு இருப்பதாகவும் தெரிவித்தார்.*

*இயற்கை பாதிப்புக்கு இதுவரை 13 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருப்பதாகவும் , ஆனால் ஒன்றிய அரசோ வெறும் 200 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கியிருப்பதாகவும் அவர் விமர்சித்தார்.*

*இமாச்சலில் ஏற்பட்டுள்ள பாதிப்பை சரி செய்யும் பணியை அரசியல் கண்ணோட்டத்தில் அணுகக் கூடாது, உடனடியாக இமாச்சலுக்கு ஒன்றிய அரசு 10 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்க வேண்டுமென்றும் ராஜீவ் சுக்லா கேட்டு கொண்டார்.*

## 'வாட்ஸ் அப்'பில் வரும் செய்தி!




### சூலூர் பாவேந்தர் பேரவை

# புலவர் செந்தலை ந.கவுதமன் துணைவியார் திருமதி உலக நாயகி மறைவு!

## பெரியாரியச் சிந்தனையாளர்கள் - கழகத்தினர் அஞ்சலி!

*கோவை, ஆக. 25-*

*சூலூர் பாவேந்தர் பேரவை புலவர் செந்தலை ந.கவுதமன் அவர்களின் துணைவியாரும், பல்லடம் அரசு மேல்நிலைப் பள்ளி முன்னாள் தலைமையாசிரியர் சூ.ப.அரங்கசாமி (எஸ்.பி.ஆர்.) பள்ளபாளையம் சானகி இணையரின் மகளுமான சூ.அர.உலகநாயகி பி.ஏ.,பி.எட்., அவர்கள் தம் 62ஆம் வயதில் 23.8.2023 இரவு 11.45 மணிக்கு இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.*

*மறைந்த உலக நாயகி அவர்கள், செகதாம்பாள் எனும் இயற்பெயரைத் தமிழுணர்வால் உலகநாயகி எனச் சட்டப்படி மாற்றிக் கொண்டவர்.*

*தாலி நீக்கிய சுயமரியாதைத் திருமணம் ஏற்று, உறுதியான பகுத்தறிவு வாழ்வை மனநிறைவோடு மேற்கொண்டவர். மகள் க. தாய்மொழி, மருமகன் மரு.கு.இளந்தமிழன், பெயர்த்தி தா.இ.அவனி இளமொழி முதலான அனைவரின் வளர்ச்சிக்கும் அடித்தள மாகத் தம்வாழ்வை அமைத்துக் கொண்டவர்.*

*அன்னாரது மறைவுச் செய்தி அறிந்து பெரியாரியச் சிந்தனையாளர்கள், கழகத்தினர், பாவேந்தர் பேரவையினர் உள்ளிட்ட ஏராளமானோர், அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.*

*சூலூர் எஸ்.வி.எல்.நகர் 'தாயகம்' இல்லத்திலிருந்து நேற்று (24.8.2023-வியாழன்) பகல் 12.00 மணிக்கு அன்னாரது இறுதி ஊர்வலம் புறப்பட்டு சூலூர் சமத்துவவனம் மின்மயானத்தில் மதியம் 1.00மணிக்கு நல்லடக்கம் செய்யப்பட்டது.*

## வாட்ஸ் அப்பில் வந்த செய்தி !

